# DEPOSITION OF WITNESS.
## (Chapter XXIII, Cr.P.C)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.

Case No. STC.No.1085/2023

Deposition of **PW1- பிரபாகரன், த/பெ. ரகு**

எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரியும், நானும் எத்தனை வருடங்களாக நண்பர்கள் என்றால் 2012 முதல் இன்றுவரை. எதிரிக்கு 10 லட்சத்தை மொத்தமாக கொடுத்தேனா, அல்லது கொஞ்சம் கொஞ்சமாக கொடுத்தேனா என்றால் மொத்தமாக கொடுத்தேன். நான் எதிரிக்கு பணம் கொடுக்கும்போது என்ன தொழில் செய்தேன் என்றால் மென்பொருள் தொழில்நுட்பத்தில் வேலை பார்த்து வந்தேன். அப்போது மாதச்சம்பளம் எவ்வளவு என்றால் ரூ .45,000/-. எனது மனுவிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு எனது மாதச்சம்பளம் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பணத்தை எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் 06.03.2023 அன்று கொடுத்தேன்.

பணம் கொடுக்கும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் எனது அப்பா, அம்மாவும் இருந்தார்கள். அப்பா, அம்மா இருந்ததாக எனது மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரி எதற்காக என்னிடமிருந்து பணம் கடன் வாங்கினார் என்றால் கடன் பிரச்சனைக்காகவும், தொழில் வளர்ச்சிக்காகவும் பணம் வாங்கினார். எதிரி என்ன தொழில் செய்து வந்தார் என்றால் அரசு ஒப்பந்தங்களை எடுத்து செய்து வந்தார். மேற்படி விபரத்தை எனது மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி 10 லட்சத்தை எதிரிக்கு கொடுக்கும் அளவிற்கு எனக்கு வருமானம் இருந்தது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

காசோலையை நான் எந்த தேதியில் வசூலுக்கு போட்டேன் என்றால் 27.07.2023. காசோலையை வசூலுக்கு செலுத்த வேண்டாம் என்று எதிரி என்னிடம் சொன்னார் என்றால் சரிதான் . எந்த தேதியில் அவ்வாறு சொன்னார் என்றால் 2023 ம் ஆண்டு மே மாதம் , தேதி ஞாபகமில்லை. இந்த விபரத்தை எனது மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு இந்த விபரத்தை நேரில் எதிரி சொன்னாரா என்றால் தொலைபேசி மூலமாக சொன்னார் . 27.07.2023 தேதிக்கு முன்பு எதிரியிடமிருந்து நான் பணம் பெற்றேனா என்றால் ரூ .6,00,000/-ஐ வேறொரு காசோலைக்காக வட்டியுடன் சேர்த்து எதிரியிடம் பெற்றேன்.

மேற்படி ஆறு லட்சம் எதிரியிடம் பெற்றது சம்மந்தமான விபரத்தை எனது புகாரிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். முன்கூட்டியே கொடுத்த காசோலையை எப்போது எதிரிக்கு கொடுத்தேன் என்றால் 31.01.2023 ஆகும். அந்த காசோலையை நான் வசூலுக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . பழைய காசோலையை காலதாமதம் ஆகிவிட்ட படியால் நான் வசூலுக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 18.05.2023 ம் தேதி ரூ.50000/-ம், 20.05.23 ல் ரூ.4,00,000/-ம், 21.05.23 ம் ரூ.50,000/-ம், 22.05.23 அன்று ரூ.99,999/-ம் எதிரியின் வங்கி கணக்கிலிருந்து எனது வங்கி கணக்கிற்கு அனுப்பினார் என்றால் சரிதான் , பழைய காசோலைக்குரியது. மேற்படி பணம் வழக்கு காசோலைக்காகத்தான் கொடுக்கப்பட்டது என்றும், நான் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு பதிலறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான் . அதில் மேற்கண்டவாறு தொகைகள் கொடுத்தது சம்மந்தமாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான் . மேற்படி செலுத்திய பணத்தை எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் . நான் எதிரி மீது சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவில் புகார் கொடுத்திருந்தேன் என்றால் சரிதான்.

அந்த விசாரணையின்போது பணத்தை எதிரி கொடுத்து விட்டால்தான் எதிரி மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல . எதிரி மீது வழக்கு தாக்கல் செய்யாமல் இருந்ததால்தான் அதை பற்றிய விபரத்தை எனது புகார் மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான் . எதிரி தனது வங்கி மூலம் காசோலை பணத்தை கொடுத்து விட்டார் என்றும் , அதனால்தான் Stop payment கொடுத்தார் என்றால் சரியல்ல . எதிரி கடன் பெற்றதை திருப்பி செலுத்திவிட்டார் என்றும் , அசல் காசோலையை அஞ்சல் மூலமாக திருப்பி அனுப்புவதாக நான் தெரிவித்திருந்தேன் என்றால் சரியல்ல . நான் பணத்தை பெற்றுக்கொண்ட பின்பும் அதனை மறைத்து எதிரி மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

C PALANIVELRAJAN

Digitally signed by C PALANIVELRAJAN
Date: 2025.04.08 21:04:18 +0530

Judicial Magistrate,
Bodinayakanur.